DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.158/2024**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாணிக்கம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராமகிருஷ்ணன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 25.05.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சோமநாதபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது 13.02.2024 ம் தேதி குற்ற எண்.1/2022, பிரிவு 457, 380, 285 இதச வழக்கு கோப்பை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ததில் ஏற்கனவே புலன்விசாரணை அதிகாரியிடம் கூறியதை என்னிடம் கூறியதால் புதிதாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

2. பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் காளையார்கோவில் காவல் நிலைய குற்ற எண்.49/2024, பிரிவு 457, 397, 4 11, 120(பி)

இதச வழக்கில் எதிரியான தினேஷ்குமாரை 26.02.2024 ம் தேதி கைது செய்து விசாரித்தபோது காளையார்கோவில் காவல் நிலையத்தில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டதால் எதிரியை மதுரை ராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தவரை 13.03.2024 ம் தேதி சம்பிரதாய கைது செய்து சமூகம் நீதிமன்றத்தில் PT warrant பெற்று 26.03.2024 ம் தேதி இந்த வழக்கிற்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு காவல் அடைப்பு செய்தேன்.

3. பின்னர் இவ்வழக்கின் வாதியிடம் எதிரி பற்றி தகவல் தெரிவித்து சமூகம் நீதிமன்றத்தில் எதிரி ஆஜர் ஆனபோது வாதி எதிரியை அடையாளம் கண்டு கொண்டார். பின்னர் வாதியை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி நகைகள் எதுவும் இல்லாத காரணத்தால் துணிமணிகளை சேதப்படுத்தியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவு 457, 380, 285 இதசவவை 457, 380, 427 இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். 29.03.2024 ம் தேதி எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தை அ.சா.1 னிடம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தான் போய் பார்த்தபோது வீடு உடைந்திருந்ததாகதான் சொல்லியுள்ளார். அ.சா.1 எனது விசாரணையில் சாமி ரூமில் இருந்த ரொக்க பணம் ரூ.5000/- காணாமல் போனதாக சொல்லியுள்ளாரா என்றால்

ஆமாம். சம்பவ இடத்தில் எரிந்ததாக சொல்லியுள்ளதை போட்டோ, வீடியோ எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. நான் சம்பவ இடத்தில் சாட்சிகளை விசாரிக்கமால் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து ரூ.5000/-த்தை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.